*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 O Published Every Friday

Vol. 140 Jaffna, Friday, 15th February, 1980 No. 7

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 25/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.
*Apply to:*
The Manager, 'Morning Star', Vaddukoddai.

*Udupiddy Church*

## Mr. V. R. Ratnam

The death of Mr. V. R. Ratnam, retired Headmaster of the American Ceylon Mission occurred at Udupiddy on 3-2-80. He was in his 97th year.

The funeral service was held at his residence on 5-2-80 at 4 p. m. Before the Service Commenced Messrs. E. Kumarasamy, and Pandit S. Murugesu on behalf of the Hindu Community and Mr. S. Panchacharam on behalf of the Tamil Teachers' Association, spoke in appreciation of Mr. Ratnam's services to the people of the Vadamaradchi.

Rev. D. R. Ratnasingam officiated at the Funeral Service assisted by Rev. V. Tharmakulasingham, Rev. S. Kathiravelu and Rev. E. D. Rajaratnam.

Mr. Ratnam was for many years the Headmaster of the Practising School at Tellippalai during the time of Mr. A. A. Ward.

He leaves behind 5 sons and their families.

*A National Problem*

## Price escalation of property in Sri Lanka

The escalation to dizzy heights of the price of land in Sri Lanka poses a great problem to the government. That foreign nationals may also be in the race for land has added a new dimension to the problem.

Under the existing laws of the country, a foreign national purchasing land in Sri Lanka has, it is learnt, to pay a 100 per cent tax on such purchase.

But it is feared that there are loopholes by which this tax may be avoided. The 99 year lease (which is not *now* allowed in land transactions) is one way by which the tax was evaded. Purchases are also made through Sri Lankan 'nominees' or through Sri Lankan companies so long as the 'real purchaser' has no fear about the risks involved.

The 99 year lease in the Free Trade Zone, now in operation, entails the payment of Rs. 300,000 per acre by the entrepreneur plus an annual rental on the land.

Housing problem in the city for city workers and their families has reached crisis levels and house owners advertising houses, annexes or apartments for rent lease or sale tag on to their advertisement a note "Suitable for Foreigners only" or if the house is in the suburbs the information "ideal for tourism."

Is the "singapore grip" becoming gradually a strangehold?" is the question posed by the Sri Lankan nationals.

*Focus on France*

## SALIENT POINTS FOR WCC EXECUTIVE

The role of the Church in the international situation, evaluation of WCC programmes, the best way to combat racism in the 80's are some of the salient points to be discussed by the Executive Committee of the World Council of Churches currently meeting at *Liebfrauenberg* near Strasbourg in France (February 11 - 16)

*Racism.* In the next few months, Workshops and meetings will be taking place in six continents on the best way to combat racism. The 25 member comittee will discuss a preliminary assessment of where the 295 member churches are, with regard to the struggle against racism. The results will be placed before the International Conference to be held in Netherlands in June which will define a new common strategy for the churches.

*World Mission Conference* — The Committee will also give special attention to the preparations that are going on for the World Mission Conference of the World Council of Churches in May in Melbourne, and also to the WCC's humanitarian programme in Kampuchea, and the situation of the refugees throughout the world especially those in Afghanistan.

*International issues.* Among the international issues that will come up before the 25 member Executive will be the threats to world peace — the deterioration of East-West relations; the acceleration of the armaments race: the situation in Southern Africa, notably in Zimbabwe.

*Christians and Muslims* — Among the theological, educational and social activities that will receive special attention, will be the study going on in many countries on "The Community of Women and men in the church."

## Maruthanamadam Girls' Home

The following *corrections* have been sent to us in respect of our news item in our last issue about the Birthday Party at the *Girls Home* in the premises of the William Mather Memorial Women's Centre:—

(1) There were *three* children who received gifts at the Party on *23-1-80.*

(2) There were two teachers and four Uduvil College Girls' who provided the refreshments entertainment for the 40 children.

(3) The February Birthday Day Party (23-2-80) arrangements are in the hands of the *Vaddukoddai Women's Fellowship.*

## Uduvil Church

A Memorial Service for Mrs, Florence Pathinnippillai Sabaratnam, was held at Uduvil Church at 9-30 a. m. on 9-2-80.

Rev. N. W. G. Sugunarajah led the service. Rev. D. R. Ambalavanar preached the Sermon and Rev. K. S. Jeyasingam paid the tribute.

'Pathinnippillai Acca' as she was widely known had a large circle of old students colleagues and friends from Uduvil and Inuvil. The large gathering of Christians and Hindus at the Church Service on 9-2-80 and at lunch at her residence after the Service, was evidence of the "little unremembered acts of kindness and love" which characterised her work as a teacher at Inuvil for well over 3 decades and as a member of the church at Uduvil from the time of the pioneer American missionaries of Uduvil.

## Iraq's gift to Sri Lanka

Iraq has offered the Muslims of Sri Lanka 50 scholarships to be awarded to needy students to help them to graduate from Universities and other Technical and Higher Instituition in Sri Lanka.

This gift has been made to mark to advent of the 15th Century of the Islamic Hijra. Two outstanding world figures who were in Sri Lanka for the Hijra Celebrations were His Excellency Shaik Al Harakan, Secretary General of the Muslim World League and Mr, Nouri Minister of Religious Affairs of Iraq.

*OBITUARY*

## Mr. A. G. S. Senathirajah

The untimely death in London on 10-2-80 of Andrew Gunaratnam Sathiendra Senathirajah (35) came as a rude shock to the members of his family at *Arasannar Valawu,* Tellippalai.

Sathiendra had his education at Union College, Tellippalai where his chief interests were Scouting and English drama. He played prominent roles in the English One Act Plays staged in college every year on Prize Days. He was also a Rover Scout and was a member of the Ceylon Contingent for the Scout Jamboree in Greece in August 1963.

The Funeral will take place in London on 19-2-80. He leaves behind his mother Mrs. Rajapoopathy Senathirajah presently in London, his wife Molly, his two small children, also in London and his two sisters, Chandra Spenser and Vimala Dwight who are teachers in government Service in Sri Lanka.

## William Mather Memorial Women's Centre

### Annual Festival

*Saturday March 8th 1978*

Programme

7-30 a. m. Service of Holy Communion: Breakfast
2-00 p. m. Praise, Thanksgiving and Dedication Service
3-00 p. m. Sale of work
4-45 p. m. Tea
5-00 p. m. Public Meeting

Offerings for the work of the centre will be gratefully accepted.

Please come with your friends.

**Punitham Nathaniel**
Secretary
Board of Management

## WANTED

A young Christian man between the age of 17 to 30 years, to be trained for recording studio and controls work, with the basic qualifications as under:

1. G. C. E. 'O' Level-Science.
2. Ability to play the piano, guitar etc.

Also:

Musicians and singers (Tamil) with a knowledgee of Christian music for recordings on call.

Please apply early for detail application forms to:

Director
Chrietian Communications,
C/o "Navajeevanam"
Paranthan - 3.

*IN BRIEF ............*

- *Naway Darwood,* Director of the Bandaranayake Centre for International Studies who died suddenly in Colombo in September, 1979 was one time staff member of the WCC Programme to combat Raeism.
- *Alice E. Bell,* is the new General Secretary of the American Bible Society, the only woman to hold that post in its 163 year history.

## Water Scheme at Chavakachcheri

The American Finance Aid Association has promised aid to the tune of 5000 U. S. dollars for a Water Supply Scheme within the Chavakachcheri Urban Council limits. In this connection a seminar was held at the Chavakachcheri Scheming and Planning Office with Mr. V. N. Navaratnam, M. P. in the chair.

American experts from the Finance Aid Associations, officials from the Water Facilities Research Board and Assistant Commissioners of Local Governmeht were present.

The group inspected several wells in the U. C. area at the conclusion of the Seminar.

# உதயதாரகை
## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 140 ] 15 — 2 — 1980 [ இதழ் 7


## ஆயத்தத்தோடு ஆற்றுங் கருமம் ஆணித்தரமுடையது

20-2-80 புதன்கிழமை தொடக்கம் சாம்பல் புதன் ஆராதனையுடன் நோன்பு காலம் ஆரம்பமாகின்றது. இக்காலத்தில் விஷேசமாக கிறிஸ்தவர் தாம் செய்த பிழைக்காக மனம் வருந்துங் காலமாக அமைகின்றது. இயேசு பெருமான் வனாந்திரத்தில் மேற்கொண்ட நாற்பது உபவாசத்தைக் குறிப்பதுமல்லாமல் கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் பற்றித் தியானிக்கும் ஒரு முக்கிய காலமாக அமைகின்றது. இடத்துக்கும் காலத்துக்குமேற்ற சில மாற்றங்களுடன் 4-ம் நூற்ருண்டில் நோன்பு நாட்களை அனுசரித்து வந்தார்கள எனப் பல சான்றுகள் உள்ளன. இடைக்கால முற்பகுதியில் மேற்கு நாட்டுத் திருச்சபைகளில் சாம்பல் புதன்கிழமையோடு இந்த பரிசுத்த நோன்பு காலம் ஆரம்பமானதெனக் கூறப்படுகினறது. இக்காலத்தின்போது நாளொன்றுக்கு மாலை நேரத்தல் மாத்ரம ஒரு நேர உணவு எடுக்கலாம் என நோன்பு விதி இருந்தது. நோனபு காலம் முற்ருக இறைச்சி, முட்டை, பால், போனற உணவுகள் உண்ணக்கூடாதென நோன்பு இருந்ததாம். இவ்வாருக ஆத்மிக வளர்ச்சியை உறுதிப்படுத்த நோன்பு காலத்தைக் கருத்துற அமைப்பதற்கு இவ்வாருன விதிகளை அன்று தொட்டு அனுசரித்து வருகின்ருர்கள்.

இயேசு பெருமான் நாற்பது நாள் உபவாசத்தை எப்படிக் கழித்தார் என்பதை நாம் வேதத்துக்கூடாக அறிகின்ருேம். அவர் தேவனேடு நெருங்கியிருந்தார். தேவனே அவருக்கு உணவும், உறுதியும் அளிப்பவராக இருந்தார் என்பதை நாம் அறிகின்ருேம். இந்நாட்களில் உபவாசத்தல் இருந்து தியானிக்கும்பொழுது பல உறுதியான உண்மைகள் எங்கள் வாழ்க்கையின வழிகாட்டியாக விளங்குகின்றது. தேவன் தனது நோக்கத்தைத் தனக்கூடாக நிறைவேற்றத் தான் தகுதியான பாத்திரமாக இருககினறேனு என அறிய வாஞ்சைகொண்டிருந்தார். அதுமட்டுமன்றி, தேவகிருபையும் பெலனுமின்றித் தான் தேவனது சித்தத்தை நிறைவேற்ற முடியாதென்ற உண்மையையும் எடுத்துக் காட்டுகின்ருர். தான் செய்யப்போகும் கடமை காத்திரமானதெனவும் எடுத்துக் காட்டுகின்ருர்.

முன் ஆயத்தமின்றி எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகின்ருர். கடமைகளில் அளவு எவ்வாருக இருந்தாலும் அவற்றுக்கான முன் ஆயத்தஞ் செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகினருர். ஒரு பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்யும் மாணவன எத்தனையோ வருடங்களாக ஆயத்தஞ் செய்து பரீட்சைக்குத் தோற்றுகின்ருன். ஒரு சிறிய பிரயாண தூரத்தைச் செய்யவேண்டுமென நினைக்கின்றவன அதற்கு வேண்டிய ஆயத்தத்தைச் செய்துதான் ஆகவேண்டும். ஒரு குடும்பத்தை நடத்த முயலும் ஆணும் பெண்ணும் அதற்கு வேணடிய பல ஆயத்தங்களைச் செய்ய வேணடியவர்களாக இருக்கிருர்கள். இந்நிலை மக்கள மத்தியில் மாத்திரமன்றிச் சகல பிராணிகள் மத்தியிலும் காணப்படுகின்றது. ஒரு பறவைக் குஞ்சி தாமாகப் பறந்து வாழ வேண்மேயானுல் அப்பறவைக் குஞ்சி தனது தாய்ப் பறவையுடன் இருந்து ஆயததத்தைச் செய்துகொள்ளுகினறது இந்த நிலையில்தான் உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் இயங்கித் தேவனை மகிமைப்படுத்துகின்றன.

ஆதிகாலந்தொட்டு ஒவ்வொரு காரியமும் ஆயத்தஞ் செய்வதன் மூலமே முன்னேறி வந்தன என்பது தெளிவு எனவே எந்தச் சிறு காரியத்தையும் செய்வதற்கு முன்பதாக ஆயத்தஞ் செய்தலின் பெருமையையும், சிறப்பையும் நாம் நன்கு அறிதல் அவசியம்.

கிறிஸ்து தனது ஊழியத்தைச் செய்யத் தொடங்கு முன் தேவ வல்லமையைப் பெறுவதற்கே சோதனைக்குள்ளாகச் சென்ருர். எந்தக் காரியத்தையும் செய்வதற்கு ஆயத்தஞ் செய்வதென்ருல் தேவ வல்லமையைப் பெறுதலே என்ற உண்மை புலனுகின்றது தேவ கிருபையுடன் செய்யப்படும் எந்தக் காரியமும் சிறந்து பயன் விளைவிக்கும் என்ற உண்மையைக் கொண்டு தேவ கிருயையைப் பெற ஆயத்தஞ் செய்து ஆற்றலுடன் கடமைகளைப் பயனுறச் செய்ய இறைவனை நாடுவோம்.

---

### திடீர் சுகவீன லீவு

நாட்டில் உள்ள பல பாகங்களிலுமுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றிய டாக்டர்கள் பலர் திடீர் சுகவீன லீவில் சென்றுள்ளதால் நோயாளிகள் பெரும் அவலத்துக்குள்ளாஞர்கள். பல வைத்திய சாலைகளிலும் வைத்திய சேவைகள் சீர்குலைந்துள்ளதென அறியப்படுகின்றது. இருந்தும் அவசர சிகிச்சைகள் கவனிக்கப்பட்டன என்னும்பொழுது ஆறுதல். இதன் எதிரொலியாக யாழ்ப்பாணத்திலும் 12-2-80 செவ்வாய்க்கிழமை அரசாங்க வைத்திய சாலைகளில் கடமையாற்றிய டாக்டர்கள் திடீர் சுகவீன லீவில் சென்றதால், இதையறியாத நோயாளிகள் பலர் யாழ் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை பெற வந்து டாக்டர்கள் இல்லாததால் திரும்பிச் சென்றுள்ளனர் எனவும், வார்டுகளிலும் நோயாளர்களைச் சோதிக்க டாக்டர்கள் இல்லாததால் வார்டுகளில் உள்ள நோயாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் செய்தி கூறுகின்றது.

---

## குழந்தை வளர்ப்பு மாபெருங் கடமையே


ஞானசிரியர் திரு & திருமதி பாகல்
அறநெறித் தொலைக்காட்சி இயக்குநர். யு. எஸ். ஏ.


( முற்றொடர்ச்சி )

ஒவ்வொரு குழந்தைமீதும் பெற்ருேர் அன்பு வைப்பதை, குழந்தை திட்டமாக அறிவதற்கு வழி செய்ய வேண்டும். பெற்ருேர் பலரும், "பலரும், "நான் குழந்தையை நேசிப்பதை அவன் அறிவான். பல வார்த்தைகளினுல் நான் அவனை நேசிக்கின்றேன் என்று கூருவிடினும், நான் அவனை நன்ருக ஒவ்வொரு நாளும் பராமரிப்பது, இதை அவனுக்கு அறிவுறுத்தத் தவருது" என்று கூறினர்.

தெய்வ பயமும், நேர்மையான நடத்தையும் உடைய தம்பதிகள் இருவருக்குப் பல குழந்தைகள் இருந்தனர். இந்த உலகின் பொருட்கள் அவர்களிடத்தில் மிதந்து இருக்கவில்லை. நல்ல சன்மார்க்க நெறியுடன் ஆவிக்குரிய பயிற்சியைப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் போதிய அளவில் தந்து கல்வியையும் அளித்தனர். அவர்களுடைய பிள்ளைகளைப் பற்றி யாராவது இந்தப் பெற்ருேரிடத்தில் பேசினுல், எந்த அளவில் பிள்ளைகள் மீது பாசமும், தியாக உணர்வும் அவர்களிடம் இருந்தது என்று அறிய முடிந்தது.

அவ்வாறு இருந்தும் பல வருடங்கள் கழிந்த பின்னர் இந்தப் பிள்ளைகளில் ஒருவர், தான் வளர்ந்து வந்த காலத்தில் தன் பெற்ருேர் தன்மீது கொண்டிருந்த அளவு கடந்த ஆர்வத்தையும், சிரத்தையைத் தான் அறியாதிருந்ததாகக் கூறியது. விந்தையாக இருந்தது. பலரும், இந்த மகனிடத்தில் இதுபற்றிப் பேசிய பின்னரே, தன் பெற்ருேர் தன்னை எவ்வளவாக நேசித்தனர் என்றும், தன்னைக் குறித்துப் பெருமிதம் கொண்டிருந்தனர் என்றும் அறிந்ததாகச் சொன்னுர். இந்தப் பெற்ருேர் செய்ததாவும் சரியே. ஆயினும், நல் இலட்சியங்களையும், உயர்ந்த நெறிகளையும், பிள்ளைகள் முன்பாக வைப்பதற்கு அரும்பாடுபட்டு உழைத்த அவர்கள், தாங்களே நேரடியாக, தங்கள் அன்பைப் பிள்ளைகளிடத்தில் கூறி வெளிப்படுத்தவில்லை என்று, இந்தச் சம்பவம் விளக்குகின்றது.

மூன்று வயதான என் சிறிய பெண் குழந்தை, அதிகாலையிலே எழுந்து, எங்கள் அறைக்கு வருவாள். யாம் ஒன்ருகவே ஒவ்வொரு நாள் காலையையும் வரவேற்போம். அவள் மெல்ல நடந்து உள்ளே வந்து என்னை இலேசாகத் தொடுவாள். உடனே, அவளை என் இரு கரங்களினுலும் அணைத்து முத்தமிட்டுச் செல்லமாக அவளைக் கூறி அழைக்கும் வார்த்தைகளைக் கூறுவேன். என் தூக்கம் முழுவதுமாகக் கலைந்திராது. நான் மீண்டும் சிறிது தூங்குவேன். அவள் தன் அறைக்குச் சென்று, மகிழ்ச்சியுடனே, தன் பாடங்களைப் படிக்க ஆரம்பிப்பாள். ஒரு நாளின் காலையில் அவளைவிடச் சிறியவனை மகனை இரவில் விழித்திருந்து பராமரித்து, நான் களைத்துப்போய் இருந்தேன். அதிகாலையில் வழக்கம்போலவே, அவள் என் அறையில் வந்தபொழுது, அவள் வந்து இருப்பதை அறிந்து ஒரு கண்ணைத் திறந்தேன். களைப்பின் மிகுதியால் உடனே மீண்டும் உறங்கிட்டேன். அவளை அணைத்து முத்தமிட்டு, எதுவும் சொல்லவில்லை.

திடீரென்று விம்மியழும் குரல் கேட்டு விழித்தேன். கண்களைத் திறந்தபொழுது, என் மகள் மிகுந்த வருத்தமுடனே நின்றிருந்தாள். வியப்புடனும், துயரமுடனும் என்னைப் பார்த்து, "நீ என்னை மறந்திட்டாய், ஏன் என்னைக் கவனிக்கவில்லை?" என்று புலம்பினுள். அன்று காலையில் அவளின் சிறிய உலகம் சுருங்கிப் போனதாக அவளுக்குத் தோன்றியது; ஏன் எனில், களைப்பின் மிகுதியால், அவள் அன்னை, தன் அன்பை. வழக்கம்போல, செல்லமாகக் கூறி வெளிப்படுத்தவில்லை. அணைத்து, முத்தமும் இடவில்லை. அவளுடைய தேவையை உணர்ந்த நான், சடுதியில் அவளை அணைத்து, என் களைப்பையும் மறந்து அவளிடத்தில் பேசினேன் அந்தக் கணத்திலேயே, அவள் தன் துயரத்தை மறந்தாள். ஒரு நாளின் மாலையில் நானும் என் கணவரும் பால பருவததைத் தாண்டி இளம் பருவத்தை அடைந்திருந்த ஒரு மகனையுடைய பெற்ருேரைச் சந்திக்கச் சென்றிருந்தோம். மணி ஒன்பதரை ஆன உடனே இளைஞன் எங்களிடம் சொல்லிக்கொண்டு, மேல் மாடியிலிருந்த தன் அறைக்குச் சென்ருன். ஒரு சில நிமிடங்களில் அவனின் தந்தை மேலேறிச் சென்ருர். இது ஏன் என்று அவனுடைய அன்னை எங்களுக்கு விளக்கினுர். "என் மகன் நித்திரை செய்வதற்கு முன், பத்து நிமிடம். அவனுடன் அவன் தந்தை செலவிடுவது வழக்கம். அவர்களிடையே என்ன பேச்சுவார்த்தை என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் என் கணவர் இந்த வழக்கத்தை நிறுத்திக்கொண்டதே இல்லை." தந்தைக்கும் மகனுக்குமிடையே தனிப்பட்ட நல்லுறவு இருந்ததின் பலனுக, இளைஞன் வழி தவருது இருந்தான். இப்பொழுது ஒரு சமயாசாரியனுக, நல்ல சித்தியும். பிரசித்தியும் பெற்று விளங்குகின்ருன்.

குழந்தைகள் ஒவ்வொரு நாள் இறுதியிலும், தங்கள் பெற்ருேருடன் நல்லுறவுடனே இருப்பதை உணருவது அன்றி, இறைவனுடனும், தம் உறவு ஏற்ற முறையில் இருக்கிறது என்று அறிவதும், அவர்களுக்கு மிகுந்த நலன் தருவது மிகவும் உறுதி. அந்நாளில் எத்தகைய தவறுகளைச் செய்திருந்தபோதிலும், நித்திரைக்குப் போகும்பொழுது, முழு நம்பிக்கையும், மனத்திடனும் உடையவர்களாக, நாளைய தினம், புதியதும் மிகுந்த நலன் தருவதுமான ஒரு நாளாக இருக்குமென்ற நிச்சயத்தை, அவர்கள் பெற்றிருக்க வேண்டும். இந் நாவில் அவர்கள் கற்ற பாடங்கள், மறுநாளில் அப்பியசிக்கப்பெற்று, அவர்களுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியைத் தரும். குழந்தையின் அருகில் பெற்ருேர் சென்று, சிறிது பேசி உரையாடிப் பலத்திற்காகவும், வழி காட்டுதலுக்காகவும், பிரார்த்தித்துக் குழந்தையை முத்தமிட்டு உறங்க வைத்தால் அது குழந்தைக்கு நன்மையையே பயக்கும்.

---

### பிஸ்கட்

சகல பாடசாலைகளிலும் உள்ள 1-ம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையும் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் போஷாக்கு நிறைந்த பிஸ்கட் கொடுப்பதென இலங்கை அரசாங்க முடிவு செய்துள்ளது,

## சிறப்பாகச் செயலாற்றுவதே அன்பின் நோக்கம்

எங்களுக்குக் கொடுக்கப்பட்ட காரியங்களையும் பொறுப்புக்களையும் செய்கின்றோம் என்பதில் அல்ல, எவ்வளவு சிறப்பாகச் செய்கின்றோம் என்பதிலேயே பெருமையும், மகத்துவமும் தங்கியிருக்கின்றது. இந்தவுண்மையை அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள், 10-2-80 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மானிப்பாயில் நடைபெற்ற வைத்தியசாலை ஒய்வுநாள் ஆராதனையில் பிரசங்கஞ் செய்கையில் வெளியிட்டிருந்தார்.

தற்கால உலகத்துக்கு இந்த உண்மை சாலச் சிறந்ததாகும். தற்கால உலக மத்தியில் பல பிரச்சனை ஏற்பட்டுக்கொண்டு வருவதை நாம் நாளாந்தம் அவதானிக்கிறோம். நாடுகளை ஆளுகின்றவர்கள் மக்களின் நன்மை கருதி பல திட்டங்களைச் செயல்படுத்த முனைந்துவருகின்றார்கள். பல ஆலோசனைகளைக் கூறுகின்றார்கள். பல பணியாளரை ஈடுபடுத்துகின்றார்கள். அதிகமான செலவைச் செய்கின்றார்கள். ஆனால் மக்கள் திருப்தியாக வாழ வழியின்றித் தவிக்கின்றார்கள். எனவே, ஒவ்வொருவரும் எவ்வாறான கடமைகளில் ஈடுபட்டிருந்தாலும் அக்கடமைகளைச் சிறப்பாகச் செயலாற்றுவதன் மூலமே சிறப்படையலாம் என்ற கருத்து சாலச்சிறந்ததொன்றாகும். ஒரு நாட்டில் ஏற்படும் பொருளாதார நெருக்கடி, மற்றும் பல வாழ்க்கைக் கஷ்டங்களை மக்கள் நீக்கிக்கொள்ள வேண்டுமேயானால் சிறப்பாக எந்தக் காரியத்தையும் செய்வதின் மூலமே ஆகும் என்ற நெறியைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாயுள்ளோம். மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமேயானால் திறம்படச் சிறப்பாகக் கற்றலின் மூலமேயாகும் என்ற உண்மையைக் கொள்ள வேண்டும். மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பொறுப்பும், கடமையும் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் கொடையெனக் கொள்ளல் வேண்டும். கடமையைக் கண்ணுங் கருத்துமாகச் சிறக்கச் செய்து கல்போல் பாதுகாத்து தேவனை மகிமைப்படுத்த அழைக்கப்பட்டிருக்கின்றோம். செய்யும் ஒவ்வொரு சிறுகாரியமும் மக்களின் வாழ்வின் பெரிய இடத்தைப் பிடித்திருக்கின்றது. விஷேசமாகத் தற்காலத்தில் இந்த நிலை குன்றியமையினால் மக்கள் பெரிதும் துன்பத்துக்குள்ளாக ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். எனவே ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் சிறப்பாகச் செய்வதின் மூலமே தேவனை மகிமைப்படுத்தினார்கள். எனவே ஒரு நாடு, ஆதீனம், சபை, சமூகம், குடும்பம், ஸ்தாபனம் சிறந்து மிளிரவேண்டுமேயானால் ஆங்காங்கு பணிபுரிபவர்கள் சிறப்பாகச் செய்வதின் மூலமே தேவனுக்குச் சாட்சியாக விளங்கமுடியும். ஏனெனில், மனிதனுடைய குறுகிய காலத்துக்குள் தன் கடமையைச் செய்ய வேண்டியவனாக இருக்கின்றான். இந்த உண்மையை நிறைவேற்ற வேண்டுமேயானால், மக்களின் பேச்சிலும், செயலிலும், போக்கிலும் தேவனை மக்கள் அறிய வேண்டும்.

## தேவனுடைய வார்த்தைகளின் வல்லமைகள்

"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்'' என்று இயேசுக்கிறிஸ்து பிசாசுக்கு பதிலடி கொடுத்திருந்தார் என்பதை நாம் அறிவோம்.

இதில் தேவனுடைய வார்த்தைகளின் வல்லமைகளை திருமறையின் ஏனைய நூல்களில் அவதானிப்போம்.

தேவனுடைய வார்த்தை......

1. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது — சங் 19:7
2. அக்கினியைப் போலும், கன்மலையைப் நொருக்கும் சம்மட்டியைப் போலவும் இருக்கிறது—எரேமியா 23:29
3. சுதந்திரத்தை கொடுக்கிறது—அப்போஸ்தலர் 20:32
4. விசுவாசத்தை உண்டாக்குகிறது—ரோமர் 10:17
5. கிறிஸ்துவினிடம் வழி நடத்திச் செல்கிற, பாடசாலை ஆசிரியருக்கு ஒப்பாக இருக்கிறது — கலாத்தியர் 3:19, 24,
6. மறு பிறப்பைத் தருகிறது — யாக்கோபு 1:18
7. என்றுமுள்ள மெய்யான வாழ்வைத் தருகிறது—1யோவான் 5:9, 13

* * *

## நம் அனைவருக்கும் அன்பு அவசியமல்லவா?

"அன்புதான் மகிழ்ச்சிக்கு அத்தியாவசியமான ஒரே பண்பு''.

— 100,000 ஆட்களின் ஆய்வு.

"அன்பைத் திடீரென இழந்துவிடுதல் இருதய நோய்க்கும், அகால மரணத்திற்கும் காரணமாக இருக்கிறது ''

— மருத்துவ நிபுணர்.

"கணவர் தங்களில் அன்பு கூருவதுபோல தங்கள் மனைவிகளிலும் அன்பு கூர்தல் வேண்டும்.'' — எபேசியர் 5:28.

"பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் அவர்களிடம் அன்பாய் இருத்தல்.''
— தீத்து 2:4, கொலோசெயர் 3:21.

"ஒவ்வொருவரும் தன்னில் அன்பு கூருவதுபோல் தன் அயலானிலும் அன்பாய் இருத்தல் ''

— மத்தேயு 22:29.

"அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது'' — 1 கொரிந்தியர் 13.5.

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்.''

— ரோமர் 12 — 9.

"உங்கள் காரியங்கள் எல்லாம் அன்போடே செய்யப்படக் கடவது.''

— 1 கொரிந்தியர் 16:14.

"ஆவியின் கனியோ அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் போன்றவற்றில் நிலைத்திருக்கிறது.'' — கலாத்தியர் 5:22.

"நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங் கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் இருங்கள்.''

— எபேசியர் 3:17 18, 19.

"நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.''

— பிலிப்பியர் 2:2.

"சகோதர சிநேகித்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை, நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே.''

— 1 தெசலோனிக்கேயர் 4.9.

"மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்தல்.'' — எபிரேயர் 10:24.

"மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே.''

— யாகோபு 1 — 20.

"அன்பிலார் எல்லாம்
தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.''

— வள்ளுவர்.

"அன்புள்ளவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறான்.''

— வேதாந்த நிபுணர்கள்,

தொகுத்தவர்
G. D. D. Savuntharanathan
Youth Adviser
Navaly.

## பேராசை பிடித்த அரசியல்வாதிகள் என அன்னை திரேசா கூறுகிறார்

பேராசை பிடித்த அரசியல்வாதிகளே உலகில் பதட்ட நிலையைத் தோற்றுவிக்கின்றனர். இவ்வாறு நோபல் பரிசு பெற்ற அன்னை திரேசா தெரிவிக்கின்றார். மத்தியப் பிரதேசத்தில் நிருபர்கள் மத்தியில் அவர் மேலும் பேசுகையில் கடவுளின் படைப்புக்களைப் போற்றிப் பாதுகாக்க முடியாவிடினும், அரசியல்வாதிகள் அவர்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடாதெனவும் அவர் கூறினார் எனச் செய்தி கூறுகின்றது.

## கட்டிடங்கள் மாத்திரம் தரத்தை உயர்த்தாது

பாடசாலைகளின் கட்டிடங்கள் மாத்திரம் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தாது, ஆனால், மாணவர்களின் ஒழுக்கமே தரத்தை உயர்த்துமெனப் பிரதம மந்திரி கூறினார் எனச் செய்தி கூறுகின்றது.

## சிறுவர்கள் இல்லம்

யாழ்ப்பாணத் தென்னிந்திய திருச்சபையால் செயல் படுத்தப்பட்டு வரும் பல நற்காரியங்களுள் மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறுவர் இல்லம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இச்சிறுவர் இல்லம் பொருத்தமான இடத்தில் அமைந்துள்ளது. பாடசாலை ஒருபக்கம், வைத்தியசாலையும், தேவாலயமும் மறுபக்கம் இவ்வாறு பல வசதி கொண்ட இச் சிறுவர் இல்லம், சாதி சமய வேறுபாடின்றி ஆண்பிள்ளைகளுக்கு ஆதரவளிக்க முன் வந்தது சுவிசேஷ ஊழியத்தின் முக்கியத்தை எடுத்துக் காட்டுகின்றது இச் சிறுவர் இல்லத்துக்கு பலர் உதவி புரிவதற்கு முன்வந்து கொண்டிருப்பது, சிறுவர் இல்லத்தின் முதன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

## வைத்தியசாலை ஓய்வு நாள்

10-2-80 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத் தென்னிந்தியத் திருச்சபையின் வைத்தியசாலைகளுக்காகவும் அங்கு செய்யப்படும் ஊழியத்துக்காகவும், வைத்தியர்களுக்காகவும், நோயாளிகளுக்காகவும், ஆராதனைகள் ஏறெடுக்கப்பட்டது. அன்று மாலை மானிப்பாய்த் தேவாலயத்தில் விஷேச ஆராதனை நடாத்தப்பட்டது. அத்தியட்சாதீனத்தின் கீழ் இயங்கிவரும் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள் அனைவரும் மெழுகுவர்த்தியைப் பிடித்தவண்ணம் வெண்ணிற உடை உடுத்திப் பவனி வந்து ஆலயத்துட் பிரவேசித்த காட்சி, வைத்தியசாலையில் செய்யப்படும் ஊழியம். பரிசுத்தமும் மகத்துவமும் நிறைந்த ஊழியம் என்ற உண்மையைப் புலப்படுத்தியது வைத்திசாலைகளின் சார்பில் விசேஷ பாடல்கள் பாடப்பட்டது. அத்தியர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள் பிரசங்கஞ் செய்தார். அவரின் பிரசங்கத்தின்போது, இவ்வைத்தியசாலைகளில் செய்யப்படும் ஊழியத்தில் ஒரு தனிச் சிறப்புக் காணப்பட வேண்டுமெனவும் அதற்காகவே இந்த வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன எனவும் எடுத்துக் கூறுகையில், தனிச் சிறப்புத் தன்மை எது என்பதை விளக்குவதற்கு ஒரு சிறு சம்பவத்தையும் எடுத்துக் கூறி விளங்க வைத்தார். நோயாளியொருவர் இந்தியாவில் உள்ள ஒரு வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டு வந்தாராம். அவர் சுகமடைந்தார். ஓர் ஊழியன் இயேசுவைப் பற்றிப் பலருக்குப் போதனை செய்து கொண்டிருந்தாராம். சுகமடைந்த இந்த நோயாளியும் இப்போதனையைக் கேட்க நேர்ந்தது. உடனே குணமடைந்த அந்நோயாளி ஐயா நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் இயேசுவை நான் நேரில் கண்டேன் எனக் கூறினாராம். அந்த நோயாளி இயேசுவைப் பற்றிக் கூறப்பட்ட சகல நற்குணங்களையும் தனக்கு வைத்தியஞ் செய்த வைத்தியனிடம் கண்டேன், அந்த வைத்தியனிடம் இத்தனிச் சிறப்புத் தன்மை விளங்கியது எனக் கூறி, இச் சிறந்த ஊழயத்தை வைத்தியசாலைகளுக்கூடாகச் செய்யவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம் எனக் கருத்தாளத்துடன் பேசினார்.

## இருல் பாவனைக்குகந்ததல்லவாம்

இலங்கையில் இருந்து அமெரிக்காவிற்குப் பதனிட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இருல் உகந்ததல்லவென அறிவிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி கூறுகின்றது.

---

## வேண்டாம்

கேட்பதை எல்லாம்
நம்ப வேண்டாம்
நினைப்பதை எல்லாம்
செய்ய வேண்டாம்
தெரிந்ததை எல்லாம்
சொல்ல வேண்டாம்
இருப்பதை எல்லாம்
உபயோகிக்க வேண்டாம்
காண்பதை எல்லாம்
வாங்கிவிட வேண்டாம்
உங்கள் இன்பத்துக்குக்
குறையே இருக்காது.

*EDITORIAL*

## National Day 1980 and after

National Day this Year ( February 4 ) unlike Independence Days since 1948, was a day when our economy was thrown into sharper focus than on any other occasion.

The price of bread shot up to Rs. 1·35 a pound and "breadline-living" (with nothing left after food and other necessaries) became a reality sooner than many expected. Anachronistic preoccupations with pandals and parties gave place to sobriety and a sense of urgency to put the economy on a war-footing.

It is no surprise that the government itself set the new tone for the celebrations because of its dawning realisation that democracy in this country must prove its capacity *to act* if it is to survive.

The fact of the matter is, that our economic crisis is entwined with a leadership crisis in the country. The overhaul in several departments of state, the changes in portfolios, and the lid on all appointments to the public service are pointers to in-house messes, which we surmise, have caused considerable embarassment to the government.

In this context, Commissions and Probes have no doubt their own value. They can help to bring to light valuable information which could enable the government to close loopholes, and also enable it to take deterrent action on all offenders.

But the very success of these measures will depend eventually on the integrity of the public servants manning the departments which handle the files and vital documents of the Commissioners and those investigating the probes. The news item that the office containing the records of the Sansoni Commission has been broken into, makes depressing reading. So is the report of, large scale pilferage of foodstuffs from the Marketing Departments retail outlets, at a time when the government is struggling to cushion the blow of increased food prices on the average wage earner.

Development as a national priority (with a capitul D) entails *highmindedress* of a very high degree in those who turn the wheels of public administration.

The story comes to us from Israel ( where, as we know, industry flourishes at an astonishing pace ) that the same horse, belonging to horse a municipality which takes the Mayor on his rounds in the mornings removes the garbage out of town in the evenings.

To those who, with undue levity, made jokes about it, the Mayor is reported to have quipped "The horse is maintained by the municipality. I use it only in the mornings. It has to earn its keep."

In the context of the reported abuse of departmental vehicles by public servants and in the light of complaints from members of the public of a raw deal from bureucrats who unnecessarily inflate the prestige of their office, the anecdote of the municipal horse and its "keep" offers an example worth emulating.

With the prospect of the Minister of Finance succeeding in his aid-seeking mission abroad for the 'resource shortfall' of 400 million dollars (on the construction of the Kotmale, Maduru Oya and Victoria dams), with tourists spilling out (at the present rate) of our "complexes" and with eager entrepreneurs flooding our Free Trade Zone, our GNP may register an increase.

But, as Ghanian Judge Mrs. (Justice) Anne Jeagge, one of the Six Presidents of the World Council of Churches, has pointed out "Growth and progress are measured aocurately by *what happens within the human environment than by the statistics of the GNP*," ( Italics are our)

Our "imported development", based on injections of foreign capital and technical assistance from abroad, (326 foreign experts are currently working in Sri Lanka) cannot remedy the blight of our economic "winter" on the lives of the average wage earner.

It has been said facetiously that no one seriously likes wtnter except the oil cartel and the cough syrup magnates. We are not sure as to who will stand to benefit by our economic 'winter'.

One fact is important to remember. Unless our "imported development" is supplemented by internal factors and transformations "within the human environment" here in Sri Lanka ( a task, perhaps, awaiting the implementation of the Report of the Presidential Commission on *Devolution*, long overdue), we are storing up much social disorder for the future.

## Christmas Celebrations in Kiribati

by

J. P. Ambalavanar

*( Continued from 8-2-80 issue )*

On the 26th the Singing Competition was held, at which all the churches took part. Though the singing was not accompanied by any music, both children and adults were ablo to sing very. well. We did not notice that the singing competition had taken more than five hours. Special Christmas song in Kiribati were composed for the occasion.

The Dancing Competition was held on the following day. We were delighted to find the under fives dancing so beautifully. Even the elderly folks expressed their joy in their dancing. We were told that some of the dances portrayed Bible stories. Though the dancing competition took more than six hours, it was a treat to watch.

Every day after each meal, time was given for speeches and it was the time for us to answer the numerous questions put forward to us. Their question showed their interest in our culture, our traditions, our church our lives etc. For example they wanted to know more about the C. S. I. and how it was formed. They wanted to know more about the Council for World Mission and how it works. But according to the custom in the maneaba, only tho enderly folks spoke out. Thus, we could not find the feeling of the youths. However, we were happy that we got an opportunity to answer those questions to them and enlighten them on many points. The youths were not entirely left out. They were seen helping the ladies in preparing the meals. They came forward when they were called to perform a dance or take part in singing or serve during meal times. All the affairs in the maneaba were conducted in an orderly manner, speaking through the leader.

Sunday the 30th was rather a busy day for us. I was able to preach in three churches and we attended two receptions held to welcome us in two churches. In these receptions we were welcomed very warmly and we certainly felt the Christian fellowship among these people. As there is no caste system or class distinctions, they are able to live together as members of one family. They made us feel at home in their midst. On the following day we were happy to see a number of people at the Airport to see us off.

The main occupation of these islanders are fishing and cutting copra. They live in thatched houses. But they seem to take a pride in providing very comfortable modern quarters for their pastors and their churches are kept very beautiful. Once a minister of state told me that in this country pastors are respected more than a minister of state. Pastors certainly get the co-operation of the youths and adults.

We are happy that we were able to spend a week in Nikanau and enjoy Christmas happily. We always made it a point to convey the greetings of the C. S. I. and that of the Council for World Mission which has sent us here.

(concluded)

Rongoronge
Beru
Kiribati
Central Pacific

## Equality of Sexes on the Basis of the Bible

by

PATHMINI SUGUNANANTHAN

*( Continued from 8-2-80 issue )*

In the Bible there is no evidence that a child was thought of as the product of the father alone. This is in contrast to Hindu and Islamic belief where the wife's body was merely the field where the husband planted his seed. Gen. 3.15 speaks of the seed of the woman. There is reference to woman's conceiving seed in Num. 5.28. God told Abraham, "I will make you exceedingly fruitful and will make nations of you" But Sarah's part was in no way less important for God said of her, "I will bless her and she shall be a mother of nations" Chtldren are taught to give egual honour to both parents. In fact it is the mother who is mentioned first in the commandment.

Let us now turn to the New Testament and start with Jesus. It is significant that the statements which reflect the anti-feminism of the times are never those of Jesus. In contrast to the customs of His day, Jesus looked upon women as persons. Persons of valne. So much so that onlookers were astonished. The behaviour of Jesus toward a Samaritan woman puzzled even his disciples (Jn. 4.2). There was Many Magdalene whose life of prostituition wus transformed into a life of fulness by her contact with Jesus. And then Mary and Martha who loved him much had a special place in his affection. Jesus' close friendship with certain women is seen in the context of his crucifixion and resurrection. And then the woman with vaginal bleeding, Jesus did not shrink from her as any other rabbi would have done. Jesus publicly accepted gestures of love from women on a number of occasions. A young man allowing a woman to kiss his feet would have been considered scandaloue. He accepted even the affection of a sinful woman. Those who were in her company saw her as a woman of low repute and a spendthrift. But Jesus commends her act of devotion. Thus we see Jesus disregarding the ceremonial laws which applied to women and giving them the gift of His love, concern and brotherhood. *( To be continued )*

*IN BRIEF ..........*

- *Last Links may break*: Reports from an Arab Newspaper states that Arab Embassies will close their last remaining links with Egypt if the Exchange of Ambassaders between Egypt and Israel takes place in terms of the Sadat-Begin talks.
- *Chair of Christtanity*. The first University in India to introduce a Chair of Christianity is the University of Mysore in the Karnataka State. Eighty percent of the pnpulation of the State is Hindu, ten percent is Muslim and only two percent is Christian.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB / 8920 / 78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 25th February, 1980.